# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | EA.No.03/2026 in EP.101/2021 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | ம.சா– 01 ( PW– 01 ) |
| பெயர் | :- | ஹரினி த.பெ. ரவிச்சந்திரன் |
| தேதி | :- | 12–03–2026 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை**

நான் 1998-ஆம் ஆண்டு பிறந்தேன். நான் B.Com படித்துள்ளேன். இந்த சொத்து எந்த ஆண்டு பத்திரத்தின்படி என் தகப்பனாருக்கு பாத்தியப் -பட்டது என்று சொல்கிறேன் என்றால் 2000-ஆம் ஆண்டின் பாகப் பிரிவினை பத்திரத்தின்படி சொந்தம். அந்த சமயத்தில் எனக்கு 02 வயது என்றால் சரிதான்.

01-ஆம், 02-ஆம் எதிர்மனுதாரர்களுக்கும் என் தகப்பனாருக்கும் இடையே நடந்த விற்பனை நடடிவக்கைகள் 2001-ஆம் ஆண்டு நடந்த -போது எனக்கு 03 வயது என்றால் 2001-ஆம் ஆண்டு எனக்கு 03 வயதுதான். விற்பனை எதுவும் நடக்கவில்லை. பணம் வாங்கியதற்காக விற்பனை நடவடிக்கை நடந்தது என்று எனக்கு யார் எப்போது சொன்னது என்றால் என் தகப்பனார் 2020-ஆம் ஆண்டு சொன்னார். என் தகப்பனார் 2024-ஆம் ஆண்டு இறந்தார். என் தாயாருக்கு நான் சொல்லும் விவரம் தெரியுமா என்றால் தெரியும். என் தாயார் உடல் ஆரோக்கியத்துடன் உள்ளார் என்றால் சரிதான்.

என் தகப்பனாருக்கும் 01-ஆம், 02-ஆம் எதிர்மனுதாரர்களுக்கும் இடையே எத்தனை வழக்குகள் நடந்தன என்றால் 02 வழக்குகள். என் தகப்பனார் தொடுத்த முதலேற்பு வழக்கு எண் 316/2007 என்ற வழக்கு தள்ளுபடியானது எனக்குத் தெரியும். அந்த வழக்கின் தீரப்புரையை நான் படித்துப் பார்க்கவில்லை. என் தகப்பனார் நீதிமன்றத்தை ஏமாற்றி வழக்கு தொடுத்தார் என்று அந்த வழக்கில் முடிவுசெய்யப்பட்டது என்றால் அது எனக்குத் தெரியவில்லை.

முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு எப்படி தெரியும் என்றால் என் தாயார் சொன்னார். ஆவணங்களை பார்த்தும் தெரிந்துகொண்டேன். முதலேற்பு வழக்கு எண் 316/2007- வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து என் தகப்பனார் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது.

முதலேற்பு வழக்கு எண் 140/2016 வழக்கில் என் தகப்பனாரும் தாயாரும் தோன்றாததால் எதிரவர் இல்லாமல் வழக்கு நடத்தப்பட்டு தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அவர்களுக்கு உடல்நிலை சரியில்லாததால் வரவில்லை. எதிரவர் இல்லாமல் பிறப்பிக்கப் பட்ட தீர்ப்பாணையை இரத்து செய்வதற்கு மனுதாக்கல் செய்வதில் விளைந்த காலதாமதத்தை மன்னிக்க கோரி என் தகப்பனார் தாக்கல்செய்த விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன தீர்ப்பணையை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். முதலேற்பு வழக்கு எண் 140/2016 வழக்கின் தீர்ப்பு எங்களை கட்டுப்படுத்தும் என்றும் அதன்படி சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்க நாங்கள் கடைப்பட்டுள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல.

மனுவிலும் முதல் விசாரணைக்கான ஆணையுறுதியிலும் நான் சொல்லியுள்ள சங்கதிகள் யாவும் நான் கேள்விபட்டவை என்றால் சரிதான். மோசடியாக முதலேற்பு வழக்கில் எதிரவர் இல்லாமல் தீர்ப்பாணை பெறப் பட்டதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. தீர்ப்பாணை மோசடியாக பெறப்பட்டது என்று என் தகப்பனாரே சொல்லாத நிலையில் அவ்வாறு சொல்ல எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது இந்த மனுமூலம் சொல்லியுள்ள சங்கதிகள் யாவும் முதலேற்பு வழக்கில் சொல்லப்பட வேண்டியவை என்றும் அங்கு என் பெற்றோர் சொல்லாமல் விட்டுவிட்ட நிலையில் இந்த நிறைவேற்று மனுவில் அதுக் குறித்து சொல்ல முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. இந்த மனுவை தாக்கல்செய்ய எனக்கு தகுதி இல்லை என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.